கூட்டுறவுத் தேர்தல்கள் - 2023

தேர்தல் மிக அவசரம்

## தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையம் சென்னை – 600 018.

**அனுப்புநர்**

திரு.தயானந்த் கட்டாரியா, இ.ஆ.ப.,
ஆணையர்,
தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின்
தேர்தல் ஆணையம்,
சென்னை – 600 018.

**பெறுநர்**

1. கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் / மாநில தேர்தல் அலுவலர்,
2. அனைத்து செயற்பதிவாளர்கள் / மாநில தேர்தல் அலுவலர்கள்

ந.க. 1111/2022/கூதே.5 நாள்: 11.01.2023

ஐயா / அம்மையீர்,

பொருள்: கூட்டுறவுச் சங்கத் தேர்தல்கள் 2023 – தேர்தல் நடவடிக்கைகள் பற்றிய புகார்கள் – புகார் மனுக்கள் மீதான நடவடிக்கைகள் – தேர்தல் புகார் மனு பதிவேடு (Register for Election Compliant petitions) பேணுதல் - அறிவுரை வழங்குதல் – தொடர்பாக.

*****

கடந்த 2018 ஒட்டு மொத்த தேர்தல் நடவடிக்கைகள் தொடர்பாக மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் அதன் மதுரை அமர்வு மற்றும் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தால் அமைக்கப்பட்ட கூட்டுறவு வழக்குகளுக்கான 4 சிறப்பு மண்டலக் குழுக்கள் முன்பாக பல்வேறு வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன.

அவ்வழக்குகளில் மனுதாரர்கள் தாங்கள் ஏற்கனவே மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாநில தேர்தல் அலுவலர் ஆகியோருக்கு இம்மனுக்களில் தெரிவிக்கப்பட்ட புகார்களை அனுப்பியுள்ளதாகவும் ஆயின் அவற்றின் மீது அவர்கள் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை எனவும், சில இனங்களில் தேர்தல் நடவடிக்கை முழுவதும் முடிவுற்ற பின்னர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில் நீதி மறுக்கப்பட்டுள்ளதாகவும் ( Justice delayed is Justice denied) தெரிவித்து இடைக்கால தடை ஆணை அல்லது தேர்தலை ரத்து செய்து ஆணைப்பெற்றுள்ளனர்.

இது தொடர்பாக தேர்தல் ஆணையம் மாநில தேர்தல் அலுவலர்கள் / மாவட்டத் தேர்தல் அலுவலர்கள் ஆகியோர்களிடம் புகார் மனுக்கள் பெறப்பட்டதா அவ்வாறாயின் அவற்றின் மீது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் ஆகியவை குறித்து விபரங்கள் கேட்ட போது உரிய விபரங்கள் உரிய காலத்தில் கிடைக்கவில்லை.

இந்நிலை மனுதாரர்கள் தங்களுக்கு சாதகமான ஆணைகளை பெற ஒரு காரணமாக அமைந்தது.

இந்நிலையினை ஆணையம் மிகக் கவனத்துடன் பரிசீலனை செய்தது. பரிசீலனையில் புகார் மனுக்கள் மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்காதிருத்தல், தாமதமாக எடுத்தல், மனுதாரருக்கு மனு மீதான நடவடிக்கைப் பற்றி தெரிவிக்காது இருத்தல் போன்றவை முற்றிலும் தவிர்க்கப்பட வேண்டும் என்றும் எக்காரணம் கொண்டும் இந்நிலை தொடரக் கூடாது என ஆணையம் கண்டிப்பாக தெரிவிக்கவும் விரும்புகிறது.

தவிரவும் இது தொடர்பாக கீழ்க்காணும் அறிவுரைகளையும் ஆணையம் வழங்குகிறது.

1. தேர்தல் நடவடிக்கைகள் தொடர்பாக பெறப்படும் புகார் மனுக்களை தனியே ஒரு பதிவேடு (Register for Election Complaint Petitions) பேணப்பட வேண்டும்.

2. அப்பதிவேடு இணைப்பில் கண்ட படிவத்தில் இருத்தல் வேண்டும்.

3. இணைப்பில் கண்ட படிவத்தில் உள்ளபடி ஒரே மாதிரியாக தேர்தல் புகார் மனு பதிவேடானது (Register for Election complaint petitions) தேர்தல் ஆணையம், அனைத்து மாநில தேர்தல் அலுவலர்கள், அனைத்து மாவட்ட தேர்தல் அலுவலர்கள், மற்றும் அனைத்து தேர்தல் அலுவலர்கள் ஆகியோர் தங்கள் அலுவலகங்களில் வைத்து முறையாகப் பராமரித்தல் வேண்டும்.

4. இந்த தேர்தல் புகார் மனு பதிவேடு தேர்தல் ஆணையத்தின் ஒரு ஆவணமாக கருதப்பட்டு தேர்தல் ஆவணமாக (Election Records) தேர்தல் அலுவலரின் பொறுப்பில் பாதுகாப்பாக பராமரிக்கப்பட வேண்டும்.

5. கூட்டுறவுச் சட்டப்பிரிவு 90-ன் கீழ் தேர்தல் முடிவு அறிவித்த பின்னரே (Date of Declaration of Result) தேர்தல் தாவா தொடர மனு செய்ய முடியும் என்பதை கவனத்திற் கொண்டு பிரிவு 90-ல் தேர்தல் தாவா அல்லாத தேர்தல் நடவடிக்கைகள் பற்றிய புகார் மீது தேர்தல் முடிவு அறிவிப்பதற்கு முன்னரே ஒவ்வொரு நடவடிக்கைக்கும் இடைப்பட்ட கால அளவு குறைவாக உள்ளதால் அவற்றின் மீது உடனுக்குடன் நடவடிக்கையினை எடுத்து முடிவினை மனுதாரருக்கும் தெரிவித்திட வேண்டும்.

இந்த அறிவுரைகளை தவறாது கடைப்பிடித்து, கூட்டுறவுச் சங்கத் தேர்தல்கள் சுதந்திரமாகவும், நியாயமாகவும் நடைபெற அனைத்து வகை ஒத்துழைப்பையும் நல்கிட மாநில தேர்தல் அலுவலர்கள் அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

தவிரவும் இந்த அறிவுரைகளை தங்களது நிர்வாகக் கட்டுப்பாட்டிற்குட்பட்ட கூட்டுறவுச் சங்கத் தேர்தல் தொடர்பான அனைத்து அலுவலர்களுக்கும் உரிய நடவடிக்கைக்காக தெரிவித்திடவும், தெரிவித்த விபரத்தை 20.01.2023-க்குள் ஆணையத்திற்கு தெரிவித்திடவும் அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

ஒம்/-

ஆணையர்

12/1/23

ஆணையருக்காக

18/18

12/01/23

இணைப்பு : தேர்தல் புகார் மனு பதிவேடு படிவம்

நகல் : 1. அனைத்து மாவட்டத் தேர்தல் அலுவலர்கள்

2. கணினி ஆளுமையாளர்

3. இருப்புக் கோப்பு – 2023.

## படிவம் (FORMAT)

## தேர்தல் புகார் மனு பதிவேடு (REGISTER FOR ELECTION COMPLAINT PETITIONS)

**துறையின் பெயர்:**

| வ. எண் (S. No.) | தேதி (Date) | மாவட்டம் (District) | சங்கத்தின் பெயர் (Name of the Society) | புகார்மனு தாரரின் பெயர் மற்றும் முகவரி (Name and Address of the Petitioner) | புகாரின் சுருக்கம் (Brief note about Petition) | நடவடிக்கை எடுக்கப்பட்ட விவரம் (Action taken Report) | முடிவின் தன்மை (Nature of Conclusion) | தன் பதிவேடு எண் (PR No.) | குறிப்பு (Remarks) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |

(ஒம்)/-

ஆணையர்

12/1/23

ஆணையருக்காக.

12/01/23